1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : விவசாயக் கிடங்கு கட்டுவது என்ருல் குறைந்த பட்சம் அதிலே வருஷத்திற்கு 50,000 ரூபாய் அளவுக்கு வரவு-செலவு ஆகவேண்டும் என்ற அளவுகோல் இருக்கிறது. அதனுல்தான் இடையில் தடைப்பட்டு 28—2—1975 அன்று மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Cultivation of Jute

*732 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether any study has been conducted on the cultivation of jute in non-paddy areas of Thanjavur district?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : தஞ்சையில் பைலட் ஸ்கீமாக சணல் விளைவிப்பது பரிசீலிக்கப்பட்டதா? அதிலே என்ன முடிவு ஆயிற்று? அது சக்ஸஸ்புல்லா இல்லையா? இது மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய முறையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : வினு "நான்-பாடி ஏரியாவில் இது பரிசீலிக்கப்பட்டதா?" என்பதாகும். நஞ்சை நிலங்களில் சில பகுதிகளில் இரண்டொரு இடங்களில் 1971, 1972, 1973 ஆகிய வருஷங்களில் பரீட்சித்துப் பார்த்ததில் ஜூட் பயிர் செய்வதை விவசாயிகள் விரும்பவில்லை என்று முடிவு செய்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் சணல் பயிரிடப்படுகிறது. அந்த விவசாயிகளை ஊக்குவிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: வினு ஜூட் பற்றியது. அவர்கள் 'ஹெம்ப்' பற்றிக் கேள்வி கேட்கிருர்கள். ஹெம்ப் வேறு. ஜூட் வேறு. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், நாகப்பட்டினம், மன்னுர்குடி, மாயூரம் ஆகிய பகுதிகளில் 10 சென்ட் அளவில் ஜூட் பயிர் செய்து பார்க்கப்பட்டது.

நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்

*733 வினு—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

[1975 ஏப்ரல் 19

தமிழ் நாட்டில் உள்ள நகரசபை உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் நியமனங்களை அந்தந்த நகரசபை ஆணையாளர்களே ஏற்றுவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். மருதாசலம் : நகரசபைகளில் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்றால் அப்படி நியமிப்பதற்கு, காலியான இடங்களை நிரப்பும் விஷயத்தில் நகராட்சி ஆணையாளர் சென்னையில் உள்ள முனிசிபல் டைரக்டருக்கு எழுதி இவர்கள் மூலமாகத்தான் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அப்படி அல்லாமல் தலைமை ஆசிரியர்களை நியமிப்பதற்கு அந்தந்த நகராட்சி ஆணையாளர்களுக்கே அதிகாரம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலிலேயே இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். ரூ. 300-க்கு மேற்பட்டு சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களை எல்லாம் மாநிலத்தில் இருக்கிற குழுதான் தெரிவு செய்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : பொதுவாக, நகராட்சி, ஊராட்சி மன்றங்களில் ஏற்கனவே பணி புரிந்து கொண்டிருக்கிற ஆசிரியர்தான் பதவி உயர்வின் அடிப்படையில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுகிறார். ஆகவே, ஆசிரியர்களை நியமிக்கிற ஆணையாளரே தலைமை ஆசிரியரையும் நியமிப்பதில் என்ன இடையூறு இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இடையூறு ஒன்றும் வந்து விடாது. ரூ. 300-க்கு மேல் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் என்று வைத்திருக்கிறோம். ஹெட்மாஸ்டர் என்று வரும்போது அதை மாநிலத்தில் இருக்கிற குழு நிர்ணயிப்பதுதான் தகுதி அடிப்படை, உள்ளூரில் இருக்கிற சிக்கல்கள் எல்லாம் தீருகிற அளவில் ஒரு நியாயமான தேர்வு அங்கே நடைபெறும்.

திரு. என். மருதாசலம் : தலைமை ஆசிரியர்களை நியமிப்பதில் அதிகக் காலதாமதமாகிறது. ஆகவே அந்தகால தாமதத்தையாவது குறைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதைப் பற்றிக் குறிப்பிட்டு தனியாக எழுதிக் கொடுத்தால் காலதாமதத்தைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

1975 ஏப்ரல் 19]

திரு. சு. துரைசாமி : தமிழ்நாடு முழுவதிலுமுள்ள நகர சபை பள்ளிக்கூடங்களில் தலைமை ஆசிரியர்கள் பற்றி அண்மையில் இன்ஸ்பெக்டர் அவர்களால் யார், யார் தலைமை ஆசிரியர்கள் என்று ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருப்பூரில் ஒரு உயர்நிலைப் பள்ளிக் கூடத்தில் ஐந்து ஆண்டுகளாக ஒருவர் ஹெட் மாஸ்டராக வேலை பார்த்து வந்தார்கள். இன்று அவர் ஹெட் மாஸ்டர் பதவியிலிருந்து கீழே இறக்கப்பட்டிருக் கிறார்கள். ஆகவே ஐந்து ஆண்டுகள் யாராவது ஒருவர் ஹெட் மாஸ்டராக வேலை பார்த்திருந்தால் அவர்களுக்கு பாதிப்பு இல்லாத அளவிற்கு அமைச்சர் அவர்கள் உத்திரவு பிறப்பிப் பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இது ஒரு பொதுவான கேள்வி. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரச்னைபற்றிக் கூறுகிறார்கள். ஆகவே அவர்கள் அதுபற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. என். டென்னிஸ் : ஹெட் மாஸ்டரை நியமிப்பது நகரசபை நியமனக் கமிட்டி. ஆகவே அவர்களே ஹெட் மாஸ்டர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஏற்கனவே இல்லை என்று குறிப்பிட்டேன். மாநில அளவில்தான் செய்ய முடியும்.

திரு. கோ. இளங்கோவன் : அரசாங்க ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் அரசு ஊதியத்தை உயர்த்திக் கொண்டே போகிறது. எனவே இப்போது ரூ. 300 என்று நிர்ணயித் திருப்பதை ரூ. 400 என்று உயர்த்துவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது புதிய யோசனை. பிறகு பார்க்கலாம்.

மானமதுரை குடிநீர் வழங்கு திட்டம்

***734 வின—** திரு. த. சோனையா : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானமதுரை பேரூராட்சி குடிதண்ணீர் திட்ட வேலை இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?